செய்தி மடல்

ICRC

இலங்கை

# கருணையின் சக்தியுடன் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினத்தைக் கொண்டாடுதல்

மே 2022



ஒவ்வொரு வருடமும் மே மாதம் 8ஆம் திகதி உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறைத் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. தத்தமது சமூகங்களில் வாழும் மக்களுக்கு உதவியளித்து, பராமரித்து, உயிர்காக்கும் சேவைகளை வழங்கும் பல மில்லியன் கணக்கான தன்னார்வத் தொண்டர்களின் அர்ப்பணிப்பையும், காருண்யத்தையும், ஊக்கத்தையும், தாக்கத்தையும் கௌரவித்தல் இதன் நோக்கம். இந்தத் தினத்தின் இவ்வாண்டுக்குரிய தொனிப்பொருள் 'கருணையின் சக்தியில் நம்பிக்கை வைத்தல்' என்பதாகும். இது செஞ்சிலுவை சர்வதேச குழுவின் (ICRC) ஸ்தாபகக் கொள்கைகளுடன் (மனிதாபிமானம்) நெருங்கிய தொடர்பு கொண்டு, தன்னார்வத் தொண்டுச் சேவையின் ஆதாரத்தை மக்களுக்கு நினைவூட்டுகிறது.

இலங்கையில், உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறைத் தினமானது தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் (SLRCS) வவுனியா கிளையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுடன் வவுனியா கத்தோலிக்கத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் 'மனிதநேய கருணை'க்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரத்ததான முகாமில் பல தன்னார்வத் தொண்டர்கள் இரத்ததானம் செய்தார்கள். இதனைத் தொடர்ந்து, வவுனியாவில் உள்ள அன்பகம் அன்னை தெரேசா இல்லத்தில் தாய்-தந்தையை இழந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள் அடங்கலாக பிரதேசத்தில் வதியும் 100 பேர் மத்தியில் படுக்கை விரிப்புகள், உலருணவுகள், சுகாதார மற்றும் தூய்மைப்படுத்தல் பொருட்கள்; போன்றவை அன்பளிப்பாக வழங்கப்பட்டன. தன்னார்வத் தொண்டர்கள் சிரமதானத்தின் மூலம் வளாகங்களை சுத்தம் செய்து, இந்த இல்லத்தில் மரநடுகை செய்து, அந்நாளை பூர்த்தி செய்தார்கள்.

இந்நிகழ்வில் SLRCS தேசிய தலைமையக பணிக்குழாமைச் சேர்ந்தவர்கள், SLRCS வவுனியா அடங்கலாக வடக்கின் ஏனைய கிளைகளின் தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோர் மாத்திரமன்றி, ICRC யின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

*ஒன்றன்மேல் ஒன்றாகத் தொடரும் கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவுகள், சுவாத்திய மாற்றத்தால் தூண்டப்பட்ட அனர்த்தங்கள், ஆயுத நெருக்கடிகளுக்கு மத்தியில், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கத்தின் பணியாளர்களும் தன்னார்வத் தொண்டர்களும் முக்கியமான உதவிகளுடன் ஆகக்கூடுதலான ஆட்களை நாடி வருகிறார்கள். உலகெங்கிலும் 524 பேரில் ஒருவர் என்ற ரீதியில் (14.9 மில்லியன் மக்கள்) தேசிய செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களுடன் தன்னார்வ தொண்டுச் சேவையில் இணைந்துள்ளனர்.*

## சட்டத்தை நிலைநாட்டும் செயற்பாடுகளில் இராணுவத்தைப் பயன்படுத்தல் பற்றிய பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் பாடநெறி


Sri Lanka Army

ICRC ஆனது இலங்கை இராணுவத்தில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தைப் (IHL) பயிற்றுவிப்பவர்கள் 30 பேருக்காக பெப்ரவரி 22 தொடக்கம் 24ஆம் திகதி வரை கொழும்பு காலிமுகத் திடல் ஹோட்டலில் மூன்று-நாள் பாடநெறியை நடத்தியிருந்தது.

இந்தப் பயிற்சிநெறியின் பிரதான நோக்கம் சர்வதேச மனித உரிமை சட்டம் (IHRL) பற்றிய அறிவை மேம்படுத்தி, சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரங்களை (கைது செய்தல், தடுத்து வைத்தல், தேடுதல், கைப்பற்றல், படைப்பலத்தையும், துப்பாக்கிகளையும் பயன்படுத்தல் அடங்கலாக) பிரயோகிப்பதற்கு வழிகாட்டியாக அமையக்கூடிய சர்வதேச நெறிமுறைகள் மற்றும் தராதரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இந்தக் கற்கைநெறியில் பங்குபற்றியவர்களுக்கு வழிகாட்டுவதற்கு நடைமுறைப் பயிற்சிகளும், விடய ஆய்வுகளும், காணொளிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## சிலாபத்திலும், மட்டக்களப்பிலும் பிரேத அறைகளை புதுப்பித்த ICRC


ICRC

சிலாபத்திலும், மட்டக்களப்பிலும் உள்ள இரு சட்ட-மருத்துவ பிரேத அறைகளின் புதுப்பித்தல் வேலையை ICRC ஆனது 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் பூர்த்தி செய்தது. இந்த முன்முயற்சியின் நோக்கம், நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுப்பதுடன், சடலங்கள் கண்ணியமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்வதாகும்.

வேலைகள் சுமுகமான முறையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தவும், தொற்றுள்ள பகுதிகளை ஒதுக்கி வைக்கவும் கட்டடத்தின் கட்டமைப்பை மாற்றுவதும் புதுப்பித்தல் பணிகளில் உள்ளடங்கியிருந்தது. மட்டக்களப்பில், தமது அன்புக்குரியவரின் பிரிவால் வாடும் குடும்பங்கள் தொற்று அபாயம் இல்லாமல் இறந்தவரை பார்வையிட வசதியாக மூடப்பட்ட பகுதியொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

## சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான விதிமுறைகள் மற்றும் தராதரங்கள் பற்றிய பயிலரங்கு



M.Elserafy/ICRC

சிறைச்சாலையில் தடுத்து வைத்திருத்தல் பற்றிய சர்வதேச விதிமுறைகள் மற்றும் தராதரங்கள் தொடர்பான பயிலரங்கை கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகள் பயிற்சி நிலையத்தில் ICRC நடத்தியிருந்தது. சிறைச்சாலை பணிக்குழாமில் இணைந்து கொண்ட 204 பேர் பயிலரங்களில் பயன்பெற்றனர். இதில் நெல்சன் மண்டேலா விதிகள், தடுப்புக் காவலில் சுகாதாரம், சிறைச்சாலைகளில் மோசமாக நடத்தப்படுவதைத் தடுத்தல் ஆகிய விடயங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது. சிறைச்சாலைகளில் சர்வதேச தராதரங்கள் தொடர்பில் இவ்வாண்டு மேலும் இரண்டு பயிலரங்குகளை நடத்த ICRC திட்டமிடுகிறது.

## ஜீன்-பிக்டெட் போட்டியில் இலங்கை மாணவருக்கு கில்பெர்ட்-அப்பொலிஸ் பரிசு



ICRC

2022ஆம் ஆண்டு மார்ச் 18 தொடக்கம் 26 வரை அல்பேனியாவில் நடைபெற்ற ஜூன்-பிக்டெட் போட்டியில் ICRC யின் அனுசரணையுடன் கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றன. இரு அணிகளும் அரையிறுதி வரை முன்னேறியதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அனுக் தர்மசேன (புகைப்படத்தில் இடது ஓரத்தில் இருப்பவர்) கில்பெர்ட்-அப்பொலிஸ் பரிசை வென்றார்.

# பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணிக்குழாம் கல்லூரியில் IHL பற்றிய கருத்தரங்கு



சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் பற்றி கருத்தரங்கை பட்டலந்தையில் உள்ள பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணிக்குழாம் கல்லூரியில் மார்ச் 14ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை ICRC ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கருத்தரங்கு IHL பற்றிய விரிவுரைகளையும், விடய ஆய்வுகளையும் உள்ளடக்கியிருந்தது. சவூதி அரேபியா (5 பேர்), ருவான்டா (ஒருவர்), செனிகல் (ஒருவர்), மாலைத்தீவுகள் (ஒருவர்), இந்தியா (3 பேர்), பாகிஸ்தான் (3 பேர்), பங்களதேஷ் (3 பேர்), நேபாளம் (2 பேர்), ஸம்பியா (ஒருவர்), ஓமான் (ஒருவர்), இந்தோனேஷியா (ஒருவர்) அடங்கலாக இராணுவ, விமானப்படை, கடற்படை உத்தியோகத்தர்கள் 152 பேர் பங்கேற்றார்கள்.

மோதல்களை நடத்துகையிலும், சமாதானத்தைப் பேணுதல்களிலும் IHL ஐ பிரயோகித்தல், சட்டத்தை நிலைநாட்டும் கடமைகளில் இராணுவத்தைப் பயன்படுத்தல் அடங்கலான விடயங்கள் கருத்தரங்கில் ஆராயப்பட்டன. முரண்பாடுகளுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள், அபாய நிலைமைகளில் சுகாதார பராமரிப்பு, நகர்ப்புற யுத்தங்கள் மற்றும் உதவி தரும் உறவுகள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் IHL தொடர்பில் ICRC யின் நிலைப்பாடு முதலான IHL உடன் தொடர்புடைய தொனிப்பொருட்கள் பற்றியும் கருத்தரங்களில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் விளக்கம் அளிக்கப்பட்டது.

## தரவுகளும், எண்ணிக்கைகளும்

### 2022 ஜனவரி முதல் ஏப்ரல் வரை



### ஆட்கள் காணாமல் போன குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றுதல்

- விடயங்களைக் கண்டறியும் தொடர் விசாரணைகளுக்காக **646** குடும்பங்கள் தொடர்பு கொள்ளப்பட்டதுடன், **3** பேர் காணாமல் ஆக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது;
- காணாமல் ஆக்கப்பட்ட **535** பேரது உறவினர்களின் நலன்கருதி, உளவியல் ரீதியாக உதவி செய்யும் **1,742** அமர்வுகள் நடத்தப்பட்டன. இவர்களில் **49** பேரது பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாக, கல்வி, சுகாதார தேவைகளை நிறைவேற்றுவதற்காக உதவி பெறக்கூடிய வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்;
- நுண் பொருளாதார முன்முயற்சி பயனாளிகள் **110** பேருக்கு அரச மிருக வைத்திய, விவசாய திணைக்களங்களின் ஒருங்கிணைப்புடன் வணிக முகாமைத்துவ ஆற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டன;



### தடுப்புக் காவல் நிலைமைகளைக் கண்காணித்தல்

- நாடு முழுவதிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 260 பேரை தனித்தனியாக சென்று பார்வையிட்டதுடன், இந்த விஜயங்களில் கண்டறியப்பட்ட விடயங்களும் பரிந்துரைகளும் நம்பகமான முறையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுடன் பகிரப்பட்டன;
- தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களைப் பார்வையிடச் செல்வதற்காக **221** குடும்பங்களுக்கு பயணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது;
- தடுப்புக் காவல் நிலையங்களில் **20** செஞ்சிலுவை சங்க செய்திகள் பரிமாறப்பட்டதுடன், **35** செய்திகள் சேகரிக்கப்பட்டன;
- **5** தடுப்புக் காவல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள **3,677** பேருக்கு சுகாதார மற்றும் பொழுதுபோக்குப் பண்டங்களின் வடிவில் குறித்ததொரு நோக்கத்திற்குரிய உதவிகள் வழங்கப்பட்டன;
- **2** சிறைச்சாலை சமையலறைகள் புதுப்பிக்கப்படுவதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள **2,050** பேர் இதன்மூலம் நன்மை பெறுவார்கள்;
- கொவிட்-19 தொற்றுப் பரவலை தடுத்து, அதனைக் கட்டுப்படுத்துவதற்காக மஹர, வெலிக்கடை சிறைச்சாலைகளுக்கு தனிநபர் பாதுகாப்பு உபரணங்கள் (PPE) அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இவற்றில் **7,000** PPE, ஒவ்வொருவருக்கும் **50** லீற்றர் கைத் தொற்று நீக்கிகள், திரவ சவர்க்காரம், மற்றும் **200** உடல் சவர்க்காரக் கட்டிகள் போன்றவையும் உள்ளடங்கும்;
- மஹர சிறைச்சாலைக்கு நுண்காட்டிக் கருவிகள் **1000** குழாய்கள், அளவுகோல் நுண்குழாய்கள் அடங்கலாக ஆய்வுகூட கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன;

- வெலிக்கடை சிறைச்சாலையின் பிரேத அறைக்கு வாயுச் சீராக்கி இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது;
- சுகாதார பராமரிப்பின் மீது கவனத்தைக் குவிக்கும் வகையில் **5** தடுப்புக் காவல் நிலையங்களுக்கு **8** விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன
- ICRC யின் உதவியுடன், இலங்கையின் தடய நோயியல் கல்லூரியின் மூலம் நடத்தப்பட்ட 'தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சட்ட-மருத்துவ ரீதியாக முகாமைத்துவம் செய்தல்' தொடர்பான 2 பயிலரங்குகளில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் **38** பேரும், சட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் **20** பேரும் பங்கேற்றார்கள்.

## மனிதாபிமான சட்டத்தை மேம்படுத்தல்

- மார்ச் 9 முதல் 11 ஆம் திகதி வரை ICRC யும், ஹொங்கொங் செஞ்சிலுவை சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த ஆசிய-பசுபிக் பிராந்திய வழக்காடுமன்ற போட்டியில் கொழும்பு பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி குழுவொன்று பங்கேற்றது ;
- ஜனவரி 24 முதல் 27ஆம் திகதி வரை குக்குலேகங்கவில் உள்ள இலங்கை சமாதான உதவி செயற்பாடுகளுக்கான நிறுவகத்தில் ICRC குழு நடத்திய உயர் சர்வதேச மனிதாபிமான சட்டம் (IHL) தொடர்பான நான்கு நாள் பயிற்சி நெறியில் IHL போதனாசிரியர்கள் **20** பேர் (**17** இராணுவ, **2** கடற்படை, **1** விசேட அதிரப்படை வீரர்கள்) கலந்து கொண்டார்கள்
- ஐநா பணிக்குழாம் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறியைத் தொடர்ந்த **30** உத்தியோகத்தர்களுக்கு IPSOTSL இல் மார்ச் 3ஆம் திகதி குக்குலேகங்கையில் ICRC அரைநாள் அமர்வொன்றை நடத்தியது;
- மார்ச் 7 தொடக்கம் 11ஆம் திகதி வரையில், கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலில், சான்ரெமோவைச் சேர்ந்த மனிதாபிமான சட்டத்திற்கான சர்வதேச நிறுவக இராணுவப் பிரிவின் பணிப்பாளர் மார்க் டேக்கர்ஸ் மூலம் நடத்தப்பட்ட 'ஈடுபடுதலுக்கான விதிமுறைகள்' என்ற ஐந்து நாள் பயிற்சிநெறியில் இலங்கையின் ஆயுதப் படைகளைச் சேர்ந்த **30** உத்தியோகத்தர்கள் பங்கேற்றார்கள்;
- மார்ச் 20ஆம் திகதி, புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கொழும்பு தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ICRC நடத்திய 'யுத்தத்தின் புதிய தொழில்நுட்பங்களும், IHL உம்' என்ற தலைப்பிலான விரிவுரையில் ஆயுதப் படைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், பொலிசாரும் அடங்கலாக **31** உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்;

## இலங்கை செஞ்சிலுவைக்கு உதவுதல்

- கிளை அனர்த்த பதிலளிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் கூடார முகாமைத்துவம் பற்றி **82** தொண்டர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது;
- மனிதாபிமானக் கோட்பாடுகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் தொடர்பான **14** அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன;
- அனர்த்த சமயங்களில் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதன் மீது கவனம் செலுத்தும் வகையில் ICRCஆனது இராணுவ கல்லூரியில் கூடார முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வழங்கியது;
- பருவப் பெயர்ச்சி காலநிலையை சமாளிப்பதற்காக **1,600** படுக்கை விரிப்புகளும், **1,300** பாய்களும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டன;
- மாவட்ட மட்ட நிகழ்ச்சிகளில் **3** முதலுதவிச் சேவைகள் நடத்தப்பட்டன;
- ICRC-SLRCS யின் நாடளாவியரீதியிலான 'குடும்ப தொடர்புகளை மீள ஏற்படுத்தல் தேவை மதிப்பீட்டின்' ஒரு கட்டமாக தொலைபேசி மூலமான மற்றும் நேருக்கு நேரிலான **55** நேர்காணல்கள் நடத்தப்பட்டன;

**செஞ்சிலுவை சர்வதேச குழு**
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
T + 94 (11) 250 33 46
F + 94 (11) 250 33 48
E-mail: colombo@icrc.org www.icrc.org

**வவனியா அலுவலகம்**
70, வைரவர் கோயில் வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா
T +94 (0) 24222 28 55
F +94 (0) 24222 25 37

**மட்டக்களப்பு அலுவலகம்**
மன்ரேஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
T +94 (0) 65 222 70 70

அட்டைப் படம் SLRCS
© ICRC, June 2022

facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc

ICRC

1873/250 06.2022